மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின்
செயல்முறைகள், சென்னை-600 0006.
ந.க. எண். 4577/ஈ1 / 2021, நாள். 15.02.2022

பொருள் : தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் – தேசிய மக்கள்தொகை கல்வித் திட்டம் - வளரிளம் பருவக் கல்வி தொடர்பான பங்கேற்று நடித்தல் (Roleplay) போட்டியினை நடத்துதல் -சார்பாக.

பார்வை :
1. 2021 –22 ஆண்டிற்கான மக்கள் தொகை கல்வித் திட்ட ஆண்டு திட்டம் .
2. தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள கோவிட் - 19 சார்ந்த வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedures)
3. இந்நிறுவன இதே எண்ணிட்ட செயல்முறை கடித நாள் 03.01.2022

... ... ...

பார்வையில் கண்ட செயல்முறைகளின்படி மாவட்ட அளவிலான பங்கேற்று நடித்தல் போட்டி 17.01.2022 அன்றும், மாநில அளவிலான போட்டி 18.01.2022 அன்றும் நடத்த அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால் பள்ளிகளில் கோவிட் பெருந்தொற்று காரணமாக செயல் படாமையால் மேற்காண் தேதிகளில் நடத்த இயவில்லை.

எனவே அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களும் மற்றும் அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களும் மாவட்ட அளவிலான போட்டியினை 24.02..2022 அன்றும் மாநில அளவிலான போட்டியினை 28.02.2022 அன்று நடத்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இப்போட்டி தொடர்பான தகவல்கள் அனைத்தும் பார்வை 3 ல் குறிப்பிட்டுள்ள செயல்முறைகளின்படி மேற்கொள்ளவும் தெரிவிக்கப்படுகிறது.

இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்
2. அணைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள்

நகல்

1. மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. அரசு முதன்மை செயலர், பள்ளிக்கல்வித்துத் துறை, தலைமைச் செயலகம், சென்னை –09 அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
3. ஆணையர், பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை–06 அவர்களுக்கு மேல்நடவடிக்கைக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.